**கூடுதல் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை : திரு.C. மோகன்ராம், M.A., B.L.,**
**கூடுதல் அமர்வு நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

<u>2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை</u>

<u>அமர்வு வழக்கு எண்.145/2024</u>

<u>(C.N.R.No.TNRM 01 003048 2024)</u>

| | | |
|---|---|---|
| **குற்றமுறையிடுபவர்** | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தொண்டி காவல்நிலைய<br>குற்ற எண்.50/2018 |
| **எதிரிகளின் பெயர், வயது, தகப்பனார் பெயர் மற்றும் முகவரி** | : | **1. ராஜா,**<br>த/பெ.காசிராஜா,<br>திருவாடானை.<br><br>2. **சீனி சாகிபு**,<br>த/பெ.பால் சாகிபு,<br>திருவாடானை.<br><br>3. **தூண்டிமுத்து**,<br>த/பெ.காசிராஜா<br>திருவாடானை.<br><br>4.**கதிரவன்**,<br>த/பெ. சின்னமுத்து<br>திருவாடானை.<br><br>5. **கருப்பணசாமி**,<br>த/பெ.கருப்பையா<br>திருவாடானை.<br><br>6. **காளிமுத்து**,<br>த/பெ.நாகையா<br>திருவாடானை. |

C
MOHAN
RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:18:54 +0530

| | | |
|---|---|---|
| | | 7. **சமயக்கண்ணன்,**<br>த/பெ.காசிநாதன்<br>திருவாடானை.<br><br>8. **ராஜா,**<br>த/பெ.மலைக்கண்ணன்<br>திருவாடானை.<br><br>9. **மணிமுத்து,**<br>த/பெ.முத்துக்கருப்பன்<br>திருவாடானை.<br><br>10. **சின்னமுத்து,**<br>த/பெ.பாலு<br>திருவாடானை.<br><br>11. **ரகுமான்,**<br>த/பெ.சின்னமுத்து<br>திருவாடானை.<br><br>12. **தூண்டிகருப்பு**<br>த/பெ.ராஜா<br>திருவாடானை. |

| | | |
|---|---|---|
| Date of Occurrence | : | 07.05.2018 |
| Date of filing charge sheet | : | 16.09.2019 |
| Date of taken on file | : | 18.07.2024 |
| Date of first appearance of the accused | : | 28.03.2025 |
| Date of commencement of examination of witnesses | : | 06.08.2025 |
| Date of last hearing | : | 11.02.2026 |
| Closure of Trial | : | 11.02.2026 |

Date when the defence argument

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:18:58 +0530

| | | |
|---|---|---|
| was closed | : | 03.03.2026 |
| Date of Judgment | : | 06.03.2026 |

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C.No. 814/2020/ RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.–யின்படி**

**CASE SUMMARY:–**

| S.No. | Description | | Date |
|---|---|---|---|
| i) | Date of remand of the accused | : | A1-A12-08.05.2018 |
| ii) | Date of the filing of the complaint/Final Report in the Court. | : | 14.07.2022 |
| iii) | Dare of committal of the case to this Court of Sessions | : | 10.03.2025 |
| iv) | Date of questioning of the Accused u/s 228/240/246/251 of the Code of Criminal Procedure, 1973 as the case may be | : | 10.07.2025 |
| v) | Filing of the miscellaneous petitions including the results on challenge before Superior Courts, except routine petitions u/s 317 of the Code. | : | NIL |

vi) Date of examination in chief and cross examination of witnesses.

| Witnesses | Chief Examination | Cross Examination |
|---|---|---|
| P.W.1 | 23.07.2025 | 23.07.2025 |
| P.W.2 | 23.07.2025 | 23.07.2025 |
| P.W.3 | 11.02.2026 | 11.02.2026 |

| | | | |
|---|---|---|---|
| vii) | Date of enquiry of the accused u/s 313(1) (b) of Cr.P.C. | : | 03.03.2026 |

viii) Details of absconding of the accused and his appearance/production, as the case may be:

| Abscondance | Production |
|---|---|
| -- | -- |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:02 +0530

ix) Grant of stay by superior courts and the results thereof: NIL

**வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள்**

**1 வது குற்றச்சாட்டு**

1) 1 முதல் 12 எதிரிகள் கலகம் விளைவிக்கும் நோக்கில் சட்டவிரோதமாக கையில் கற்களுடன் ஒன்றுகூடியதன் மூலம் **இதச பிரிவு 148-ன்** கீழ் அமையும் குற்றம்.

**2 வது குற்றச்சாட்டு**

2) 1 முதல் 12 எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து பொது இடத்தில் வைத்து அசிங்கமாகப் பேசியதன் மூலம் **இதச பிரிவு 294(b)-ன்** கீழ் அமையும் குற்றம்.

**3 வது குற்றச்சாட்டு**

3) 1 முதல் 12 எதிரிகள் புகார்தாரரை கற்களைக் கொண்டு வீசி சாதாரணக் காயங்களை ஏற்படுத்தியதன் மூலம் **இதச பிரிவு 323-ன்** கீழ் அமையும் குற்றம்.

**4 வது குற்றச்சாட்டு**

4) 1, 10, 11, 12 எதிரிகள் புகார்தாரரை சட்டவிரோதமாக எங்கும் நகரவிடாமல் பிடித்துக்கொண்டதன் மூலம் **இதச பிரிவு 342-ன்** கீழ் அமையும் குற்றம்.

**5 வது குற்றச்சாட்டு**

5) 4ம் எதிரி புகார்தாரரை கொலை செய்ய முயற்சித்ததன் மூலம் **இதச பிரிவு 307**-ன் கீழ் அமையும் குற்றம்.

**6 வது குற்றச்சாட்டு**

6) 1 முதல் 3 மற்றும் 5 முதல் 12 எதிரிகள் 4ம் எதிரி புகார்தாரரை கொலை செய்ய முயற்சித்தற்கு

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.06 17:19:05 +0530

உடந்தையாக இருந்ததன் மூலம் **இதச பிரிவு 307 உ/இ 109**-ன் கீழ் அமையும் குற்றம்

| | |
|---|---|
| எதிரிகளின் பதில் | குற்றவாளிகள் அல்ல |
| நீதிபதியின் தீர்மானம் | குற்றவாளிகள் அல்ல |
| தீர்ப்பின் முடிவு | முடிவில், 1, 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 342, 307 உ/இ 109-ன் கீழும், 3, 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307 உ/இ 109-ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்ற P.R.No.18/2025 தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படாத வ.எண்.1-ல் உள்ள சுமார் 44 செ.மீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முன் பக்கங்கள் உள் வளைந்த நிலையில் உள்ள இரும்பு அரிவாள்-ஒன்று பயனற்றது என்பதால் மேல்முறையீடு முடிவடைந்த பின்னரோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்போ குற்றவியல் நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரிகள் நிறைவேற்றிக் கொடுத்த பிணைப் பத்திரங்களை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:10 +0530

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 03.03.2026 அன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.A.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 மற்றும் 9 முதல் 12 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ARM.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 8ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வேலாயுதம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

(இவ்வழக்கு நீதித்துறை நடுவர், திருவாடானை அவர்களால் முதல்நிலை விசாரணை வழக்கு எண்.26/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது)

**2. <u>குற்ற அறிக்கையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கின் புகார்தாரரான பால்கண்ணன் என்பவருக்கும் எதிரிக்கும் இடையே ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தநிலையில், கடந்த 07.05.2018 ம் தேதி மாலை 05.00 மணியளவில் முள்ளிமுனை கிராமத்தில் உள்ள கருப்பணசாமி கோவிலில் சாமி கும்பிடுவது சம்பந்தமாகவும், புதியதாக ஊர்தலைவரை தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகவும், ஊர் கூட்டம் நடந்தபோது,

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:14 +0530

புகார்தாரரின் தகப்பனார் பால்சாமி பொதுவான கருத்துக்களைச் சொன்னதால், முன்விரோதத்தில் இருந்த 1 முதல் 12 எதிரிகளும் புகார்தாரரின் தந்தைய அடித்து தள்ளிவிட்டுள்ளார்கள். இதைப் பார்த்த புகார்தாரர் "ஏண்டா இப்படி செய்றீங்க" என்று சத்தம் போட்டவுடன் 1 வது எதிரி இவனை அடித்து கொல்லுங்கடா என்று சொன்னதும், 2 முதல் 12 எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி புகார்தாரரைப் பார்த்து இந்த தேவடியா மகனே அடித்துக் கொல்லுங்கடா என்று அசிங்கமாகப் பேசிக்கொண்டே அனைவரும் அருகில் கிடந்த கல்லை எடுத்து புகார்தாரரை நோக்கி எறிந்து சாதாரணக் காயம் ஏற்படுததியும், 4 வது எதிரி வீட்டிற்கு ஓடி சென்று அருவாளை எடுத்து வந்ததும், எதிரிகள் 1, 10, 11, 12 ஆகியோர்கள் புகார்தாரரை பிடித்துக்கொள்ள எதிரிகள் 2, 5, 6, 7 8 ஆகியோர்கள் சேர்ந்து இவனை விட்டு வைத்தால் நம்மளை கொன்றுவிடுவான் இவனை கொன்று விடுங்கடா என்று சொன்னதும், 4 வது எதிரி தன் கையில் வைத்திருந்த அரிவாளால் இத்தோடு செத்து தொலைந்து போடா என சொல்லி புகார்தாரரின் உச்சந்தலையில் ஓங்கி வெட்டியதில் புகார்தாரர் தலையே லேசாக சாய்க்கவும் தலையின் பின் பக்கம் வெட்டி சாதாரணக் காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 342, 336–ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 342, 336–ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 336, 307–ன் கீழும், 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 336–ன் கீழும், 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323,

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:22 +0530

342, 336–ன் கீழும் குற்றம் புரிந்துள்ளார்கள். புகார்தாரர் பால்கண்ணன் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இவ்வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்ட தொண்டி காவல் ஆய்வாளர் எடுத்துக்கொண்டு 1 முதல் 12 எதிரிகள் மீது மேற்கண்ட பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** இந்த வழக்கினை முதல்நிலை விசாரணை வழக்கு எண்.26/2022 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு திருவாடானை, நீதித்துறை நடுவர் அவர்கள் இவ்வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 207–ன்படி வழங்கப்படவேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைத்துள்ளார். மேற்படி வழக்கினை அமர்வு வழக்கு எண்.145/2024 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்ட இராமநாதபுரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் வழக்கினை அங்கிருந்து மேல் விசாரணையின் பொருட்டு அதே எண்ணில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

**4.** இவ்வழக்கின் 1 முதல் 12 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால் 1, 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 342, 307 உ/இ 109–ன் கீழும், 3, 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:29 +0530

148, 294(b), 323, 307 உ/இ 109-ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவ 1 முதல் 12 எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என மறுத்துரைத்தார்கள்.

**5.** இவ்வழக்கில் 1 முதல் 12 எதிரிகள் மீது வனையப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

(i) அ.சா.1 திரு. அழகுராஜா தனது சாட்சியத்தில் தான் முள்ளிமுனை கிராமத்தில் வசித்து மீன்பிடித் தொழில் செய்து வருவதாகவும், சாட்சிகள் பால்கண்ணன், ராஜா, மகாலிங்கம் ஆகியோர்களை தெரியும் என்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.00 மணியளவில் கருப்பன் கோவிலில் வைத்து ஊர்த்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்மக்கள் கூடியிருந்தபோது சண்டை நடந்தது என்றும், யார் யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியாது என்றும், இருட்டாக இருந்ததால் தெரியவில்லை என்றும், யார் யாருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் தனக்கும், பால்கண்ணனுக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றும், அந்த காயங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது என்றும், போலிசார் தன்னை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:31 +0530

விசாரிக்கவில்லை என்றும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.மகாலிங்கம் தனது சாட்சியத்தில் தான் முள்ளிமுனை கிராமத்தில் வசித்து மீன்பிடித் தொழில் செய்து வருவதாகவும், சாட்சிகள் பால்கண்ணன், ராஜா, அழகுராஜா ஆகியோர்களை தெரியும் என்றும் தங்கள் ஊரைச் சேர்ந்த ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.00 மணியளவில் கருப்பன் கோவிலில் வைத்து ஊர்த்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்மக்கள் கூடியிருந்தபோது சண்டை நடந்தது என்றும், யார் யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியாது என்றும், இருட்டாக இருந்ததால் தெரியவில்லை என்றும், யார் யாருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சண்டையின்போது அழகுராஜாவுக்கும், பால்கண்ணனுக்கும் காயங்கள் ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.சரவணன், காவல் துணை கண்காணிப்பாளர் தனது சாட்சியத்தில் கடந்த 2018ம் வருடம் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது நிலைய குற்ற எண். 50/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 307ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் கோப்பு தனது விசாரணைக்கு 04.03.2019 அன்று பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்குக்கோப்பின்படி கடந்த 07.05.2018ம் தேதி தொண்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளரான மாரிச்சாமி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:36 +0530

இரவு 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது முள்ளிமுனையை சேர்ந்த பால்ச்சாமி மகன் பால்கண்ணன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து புகார்தாரரின் கையெழுத்து பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.50/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 307 ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும் பால்கண்ணன் கொடுத்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** என்றும் மாரிச்சாமி சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.3 மேலும் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் மாரிச்சாமி புகார் வாக்குமூலம் மற்றும் முதல்தகவல் அறிக்கையின் அசலை திருவாடானை நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைக்க அனுப்பி வைத்துள்ளார் என்றும் மற்ற நகலை உயர்அதிகாரிகளுக்கும், ஒரு நகலை திருவாடானை காவல் ஆய்வாளராக பணிபுரிந்த மாரீஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், ஆய்வாளர் திருமதி.மாரீஸ்வரி தனது விசாரணைக்கு கடந்த 07.05.2018 ம் தேதி அன்றே விசாரணைக்கு எடுத்து கொண்டு இரவு 09.00 மணியளவில் சம்பவ இடமான கருப்பன்கோவில் சென்று சாட்சிகள் செல்லச்சாமி, பாலு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார்செய்து மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையெழுத்து பெற்றுள்ளார் என்றும் பார்வை மகசர் **அ.சா.ஆ.3,** என்றும் வரைபடம் **அ.சா.ஆ.4** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:39 +0530

(v) அ.சா.3 மேலும் தனது சாட்சியத்தில் ஆய்வாளர் திருமதி.மாரீஸ்வரி அன்றைய தினமே புகார் கொடுத்த பால்கண்ணன் மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகளான ராஜா, அழகுராஜா, மகாலிங்கம், ராம்பிரசாத், பால்ச்சாமி, பாலு மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பாலு, செல்லச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், ஆய்வாளர் மாரீஸ்வரி தனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்ததால் 08.05.2018ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு ஏ.மணக்குடி பஸ்ஸ்டாப் அருகே வைத்து 1ம் எதிரி ராஜாவை கைது செய்துள்ளார் என்றும் 1 முதல் 12 எதிரிகளை கைது செய்துள்ளார் என்றும் 4ம் எதிரி கதிரவன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாலு மற்றும் நல்லதம்பி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி சாட்சிகளிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.3 மேலும் தனது சாட்சியத்தில் 4ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தி மறைத்து வைத்திருக்கும் அருவாளை எடுத்து ஆஜர்படுத்துகிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் அவர் 06.30 மணியளவில் முள்ளிமுனை புயல் காப்பகத்திற்கு எதிரே உள்ள கருவேல்மரம் புதருக்குள் அழைத்துச் சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் 44 செமீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முன்பக்கம் வளைந்த நிலையில் உள்ள இரும்பு அருவாள் ஒன்றை ஆய்வாளர் மாரீஸ்வரி கைப்பற்றியுள்ளார் என்றும் கைப்பற்றும்போது அத்தாட்சி தயார் செய்து சாட்சிகள் பாலு, நல்லதம்பி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:43 +0530

ஆகியோரிடம் கையெழுத்து பெற்றுள்ளார் என்றும் 4ம் எதிரி கதிரவன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** என்றும் 4ம் எதிரி அருவாளை எடுத்து ஆஜர் செய்தபோது தயார் செய்யப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.6** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.3 மேலும் தனது சாட்சியத்தில் பின்பு ஆய்வாளர் மாரீஸ்வரி எதிரிகளையும் கைப்பற்றப்பட்ட அருவாளையும் நிலையம் கொண்டு வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் கைப்பற்றப்பட்ட அருவாளை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் படிவம் 91 **அ.சா.ஆ.7** என்றும் பின்பு ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளாக கையெழுத்து செய்த பாலு மற்றும் நல்லதம்பியை 08.05.2018ம் தேதி விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) அ.சா.3 மேலும் தனது சாட்சியத்தில் இந்நிலையில் தான் தொண்டி காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்றுக் கொண்டபிறகு புகார்தாரர் பால்கண்ணனுக்கு சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் பிரஸ்தீன் என்பவரை 22.03.2019ம் தேதி விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கையின் புகைப்பட நகல் **அ.சா.ஆ.8** என்றும் அதேதினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மாரிச்சாமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தனது விசாரணையை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:47 +0530

முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 342, 307–ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசுத்தரப்பு சாட்சியங்களில் காணப்படும் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–யின் கீழ் வினவிய போது, 1 முதல் 12 எதிரிகள் சாட்சிய விவரங்களை பொய் என மறுத்தார்கள். மேலும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி ஏதும் இல்லை என தெரிவித்தார்கள். 1 முதல் 12 எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணம் ஏதும் முன்னிடப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்**

இவ்வழக்கில் 1, 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 342, 307 உ/இ 109–ன் கீழும், 3, 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307 உ/இ 109–ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**9.** புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.சரவணன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர் உட்பட மொத்தம் 14 சாட்சிகளை தனது சாட்சிப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அரசு தரப்பில் மொத்தமுள்ள 14 சாட்சிகளில் 3 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளனர்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:51 +0530

இவ்வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்த பால்கண்ணன் இறந்து விட்டதால் வழக்கின் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்து, சண்டையை விலக்கி விட்டது பற்றி கூறப்படும் சாட்சிகளான அழகுராஜா அ.சா.1 ஆகவும், மகாலிங்கம் அ.சா.2 ஆகவும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இதர சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட தேவையில்லை என்று அரசு தரப்பு வழக்கில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

**10.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை இந்நீதிமன்றம் கவனத்திற்கொண்டு பரிசீலித்து, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலித்தது. இவ்வழக்கின் காயம்பட்ட நபரான பால்கண்ணன் இறந்துவிட்டநிலையில் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கி விட்டதாகக் கூறப்படும் சாட்சிகளான அ.சா.1 அழகுராஜா மற்றும் அ.சா.2 மகாலிங்கம் தங்களது தனது முதன்மை சாட்சியத்தில் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.00 மணியளவில் கருப்பன் கோவிலில் வைத்து ஊர்த்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக கூர்மக்கள் கூடியிருந்தபோது சண்டை நடந்தது என்றும், யார் யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியாது என்றும், இருட்டாக இருந்ததால் தெரியவில்லை என்றும், யார் யாருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் தனக்கும், பால்கண்ணனுக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றும், அந்த காயங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது என்றும், போலிசார் தன்னை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:54 +0530

விசாரிக்கவில்லை என்றும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர்களது சாட்சியமும் அவர்கள் ஏற்கனவே கொடுத்த புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை. அவர்களது சாட்சியம் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை.

**11.** அ.சா.1, அ.சா.2 வரையிலான சாட்சிகள் எதிரிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக குறுக்கு விசாரணையிலிருந்து எவ்வித பதில்களையும் அரசு தரப்பில் பெறப்படவில்லை.

**12.** இந்நிலையில் புலன் விசாரணையை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.சரவணன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் புலன் விசாரணை பற்றி மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அவரின் சாட்சியத்தின் மூலம் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுக்கு வர இயலவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1, 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 342, 307 உ/இ 109–ன் கீழும், 3, 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307 உ/இ 109–ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307–ன் கீழும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:19:59 +0530

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13.** முடிவில், 1, 10 முதல் 12 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 342, 307 உ/இ 109–ன் கீழும், 3, 5 முதல் 9 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307 உ/இ 109–ன் கீழும், 4 வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 294(b), 323, 307–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1 முதல் 12 எதிரிகளை இவ்வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்ற P.R.No.18/2025 தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படாத வ.எண்.1–ல் உள்ள சுமார் 44 செ.மீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முன் பக்கங்கள் உள் வளைந்த நிலையில் உள்ள இரும்பு அரிவாள்–ஒன்று பயனற்றது என்பதால் மேல்முறையீடு முடிவடைந்த பின்னரோ அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்போ குற்றவியல் நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

1 முதல் 12 எதிரிகள் நிறைவேற்றிக்கொடுத்த பிணை பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:20:03 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.03.06 17:20:09 +0530

**கூடுதல் அமர்வு நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. அழகுராஜா |
| அ.சா.2 | திரு.மகாலிங்கம் |
| அ.சா.3 | திரு.சரவணன், காவல் துணை கண்காணிப்பாளர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.05.2018 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 07.05.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 07.05.2018 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 07.05.2018 | வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 08.05.2018 | ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 08.05.2018 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 08.05.2018 | படிவம் 91 |
| அ.சா.ஆ.8 | 07.05.2018 | விபத்து பதிவேடு அறிக்கையின் புகைப்பட நகல் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 17:20:14 +0530

**கூடுதல் அமர்வு நீதிபதி,**
**இராமநாதபுரம்**